**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

OS 67/2021

30.01.2026.

DW- 1

**பி.வா.சா.1. பன்னீர் (எ) பத்மநாபன் க/பெ. பக்கிரிசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் - காசிநாத சாளுவருக்கு சொந்தமானது. காசிநாத சாளுவர் 1ம் வாதியின் மாமனார் என்றால் - சரிதான். 2,3 வாதிகளின் தாத்தா என்றால் - சரிதான். காசிநாத சாளுவருக்கு 3 வாரிசுகள் என்றால் - அந்த விவரம் எனக்கு தெரியாது. கலியபெருமாள், இராமதாஸ், கணேசன் சாளுவர் ஆகியோர்கள் காசிநாதன் இறந்தபிறகு பாகப்பிரிவினை செய்துக்கொண்ட விவரம் என்ககு தெரியுமா என்றால் - எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு தான் தெரியும். கலியபெருமாள் எப்போது இறந்தார் என்றால் - 1978 ம் ஆண்டு இறந்தார். வழக்கு சொத்தின் பட்டா, சிட்டா ஆகியவை அனைத்தும் 3 ம் வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் - சரிதான். 26.06. 1974 ம் தேதியன்று காசிநாத சாளுவர் இறந்தபிறகு அவர்களது வாரிசுகளான கலியபெருமாள், இராமதாஸ், கணேசன் ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் - 10 மா நிலமாகும். இந்த நிலத்தில் நான் எவ்வாறு சென்றேன் என்றால் - என் அப்பா இராமதாஸ் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார். எனது அப்பா அவ்வாறு கிரயம் பெற்றதை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. எனது அப்பா, இராமதாஸிடமிருந்து கிரயம் பெற்றது பதிவு செய்யப்பட்டதா என்றால் - சாட்சி பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் மூலம் தான் வாங்கினார் என்று கூறுகிறார். இந்த விவரத்தினை எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லவில்லை. இந்த வழக்கில் எனது கட்சியானது, வழக்கு சொத்து எனது அப்பா கிரயம் வாங்கியதால் கிடைத்தது என்பதுதான் என்றால் - சரிதான். இந்த விவரத்தினை தான் எனது வழக்குரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.